**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT**
**PADMANABHAPURAM**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 711/2021 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜஸ்டின்** | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.11.2025.**
**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆவேன். புகார்தாரரும் நானும் பள்ளி பருத்தில் இருந்தே நண்பர்கள் ஆவோம். நான் 2017-2019 வரை Sree Bhagavathy Organic Mart & Herbal Products என்ற கடையை தக்கலையில் நடத்தி வந்தேன். அந்த கடையில் இயற்கை சார்ந்த உணவு பொருட்களை நான் விற்பனை செய்து வந்தேன். அந்த இயற்கை சார்ந்த உணவு பொருட்களை பல நிறுவனங்களில் இருந்து எனது கடைக்கு கொடுப்பார்கள். அதை நான் விற்பனை செய்து அவர்களுக்கு அந்த பணத்தை கொடுத்துவிடுவேன். அதில் இருந்து கமிஷன் தொகை எனக்கு கொடுப்பார்கள். மேற்படி கடைக்கு நான் GST Taxவும் செலுத்தி வந்தேன். எனது கடையின் GST No. 33AUJPJ4820A1Z7 ஆகும். அதற்குரிய Online Web Copy யை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **அந்த ஆவணம் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கடையில் போதிய வருமானம் இல்லை என்பதால் நான் 2019 வருடம் எனது கடையயை மூடிவிட்டேன். நான் கடையை மூடிவிட்ட விவரம் புகார்தாருக்கு தெரியும்.

புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுப்பதும், ஏலசீட்டு நடத்துவதும் வழக்கம். எனவே நான் 2018ம் வருடம் புகார்தாரரிடம் 1லட்சம் ரூபாய் சீட்டு போட்டிருந்தேன். அதில் நான் 56650/- ரூபாய் புகார்தாரரிடம் இருந்து சீட்டு ஏலம் எடுத்து எடுத்தேன். மேற்படி

சீட்டானது பதிவு செய்யப்படாத சீட்டு என்பதால் அவர் எனக்கு உரிய ரசீதுகள் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் அவர் அவரது டைரியில் குறிப்பிட்டு வைப்பார். அந்த 1 லட்சம் ரூபாய் சீட்டுக்கு நான் 80,000/– ரூபாய் செலுத்திவிட்டேன். ஆனால் புகார்தாரர் மேலும் 1 லட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்டு என்னை அவதுாறாக பேசி, வாட்சப்ஆப் மூலம் எனக்கு குறுஞ்செய்திகள் அனுப்பி பணம் கேட்டார். அந்த வாட்ஸ்ஆஃப் குறுஞ்செய்தியை நிரூபணம் செய்வதற்காக நான் எனது மொபைல் போன் Screen Shot Printout யை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **(விசாரணையின் போது சாட்சி அவரது மொபைல் போனை நீதமன்றத்தில் ஆஜர் செய்தார். அதினுள் இருந்த Whatsapp ன் புகார்தாரர் தொலைபேசி எண் 9489925778 என்று கூறினார். இதனை குறித்து புகார்தாரரிடம் கேட்டபோது அது அவரது தொலைபேசி எண் தான் என்றும் மேலும் அதில் அனுப்பிய குறுஞ்செய்திகள் அவர் தான் அனுப்பினார் என்று ஒப்புக்கொண்டார். புகார்தாரர் Whatsapp எண் மற்றும் அதில் உள்ள குறுஞ்செய்திகளை ஒப்புக்கொண்டதால் அந்த Whatsapp குறுஞ்செய்தியின் Screen Shot Printout Along with 65 B Certificate யை ExD2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அதனை மொபைல் போனில் உள்ள குறுஞ்செய்திகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டது )**

மேற்படி சீட்டுக்காக நான் கையெழுத்து மட்டும் போட்ட நிரப்பபடாத காசோலை ஒன்றை புகார்தாருக்கு வழங்கினேன். அந்த காசோலையை வைத்து புகார்தாரர் 3,50,000/– என தவறாக நிரப்பி 19.01.2020 தேதியில் நான் அவரிடம் 3,50,000/– ரூபாய் வாங்கியதாக கூறி இவ்வழக்கை பொய்யாக என் மீது தாக்கல் செய்துள்ளார். எனக்கு இவ்வழக்கு சம்பந்தமாக எந்தவொரு வழக்கறிஞர் அறிவிப்பும் வரவில்லை. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram(FAC)